





# சித்தரியல்

## ஆய்வு மாலை






பேரூராதீனம் தமிழ்க் கல்லூரியும்
தாராபுரம் சித்த மருத்துவ மையமும்
இணைந்து நடத்தும்
சித்தரியல் ஆய்வு மாநாடு
2005



நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகெடல்போல்
நீரில்லாது உடல் நீங்கிவிடும்
"மரப்பாவை போலவொரு மண்ணுருச்செய்து
தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத தன்மை போல
செல்லும் புளியம் பழத்தின்தோடு போலவெ
சேற்றில் திரிபிள்ளைப் பூச்சி சேற்றை நீக்கல் போல
எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தம் இல்லா வாறு போல்
தேனில் வீழ்ந்த ஈயைப்போல் சிந்தை குலைந்து
சூரியனைக் கண்ட பனி தூர ஓடல் போடல்

என்று பலவிதமான உவமைகளைக் கையாண்டுள்ளார். இவையனைத்தும் அவரது அனுபவ மொழிகளாகவும் விளங்குகின்றன. பாம்பின் சிறப்பினை இவரைப் போலப் பாடியவர் வேறு யாருமிலர். பாம்பினை முன்னிலைப்படுத்தி 129 பாடல்கள் பாடியுள்ளார். கேளாதவற்றையும், பேசாவற்றையும் முன்னிலைப்படுத்தி கேட்குந போலவும்,பேசுவன போலவும் அமைத்துப் பாடும் இலக்கண விதிக்குட்பட்டுத் தன் மனத்தையே முன்னிலைப்படுத்தி இவர் பாடியுள்ளார். பாம்பு வடிவாக மண்டலத்துள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன்மூலம் ஆன்மதரிசனம் செய்வதைக் கூறுவதாகக் குறிப்பிடுவர்.பாண்டி நாட்டில் பிறந்து சட்டைமுனியிடம் தீட்சை பெற்றவர் என்றும் திருக்கோகர்ணத்தில் பிறந்து கொங்கு நாட்டில் உள்ள மருத மலையில் வாழ்ந்தார்என்றும் குறிப்பிடுவர்.

பாம்பாட்டிச் சித்தர், சாதி வேறுபாடுகளைச் சாடுபவராய், உண்மையான குரு எத்தகையவர் என்பதையும், உண்மையான பக்தி எது என்பதையும், இறைத்தன்மையை உணர்ந்து தெளிந்தமையையும் உலக அனுபவங்களாலும், உவமைகளாலும் மிக அழகாகத் தம் பாடல்களில் சித்தரித்துள்ளார்.





## 15. குதம்பைச்சித்தர் பாடல்களில் குறளின் தாக்கம்

இரா. விஜயன், எம்.ஏ., எம்.ஃபில்.,
1/7 ரித்தேஷ் இல்லம், அண்ணா வீதி,
வடவள்ளி, கோவை – 41

சித்தர் நெறி செந்நெறி; செம்மாண்மை நெறி. தமிழக வரலாற்றில் பகுத்தறிவுப் பாசறைகளை உருவாக்கிய நெறி. இப்பகுத்தறிவுப் பகலவர்களில் ஒருவர் குதம்பைச்சித்தர். குதம்பைச் சித்தரை "குதம்பேய்ச் சித்தர்" என்கிறது அபிதான சிந்தாமணி அகத்தைப் பேயாக உருவகித்துப் பாடிய அகப்பேய்ச் சித்தர் போல், குதம்பை அணிந்த பெண்ணை விளித்துப் பாடியதால் இவருக்குக் குதம்பைச்சித்தர் என்னும் பெயர் தோன்றியிருக்கலாம். குதம்பைச்சித்தர் பெண்களைப் பழிப்பவர், அவர்களை வெறுத்துப் பாடல் பல இயற்றியவர் என இன்றும் இவர் மேல் குற்றச்சாட்டு உண்டு. ஆனால் இவர் பாடல்களை ஆழ்ந்து கற்போரானால் உண்மை தெள்ளிதின் வெளிப்படும்.

குதம்பை என்பது இளவயது மகளிர் அணியும் ஒருவகைக் காதணி. அதை முன்னிறுத்தியே தமது ஒவ்வொரு பாடலிலும் "குதம்பாய்" என இளவயது மகளிரை முன்னிலைப் படுத்துகின்றார். மனிதனுக்கு நல்லறம் ஊட்ட வேண்டும். அஃது இளவயதிலேயே தெளிவுபடுத்த வேண்டும் என உளவியல் நோக்கோடு தமது பாடல் முழுவதும் குதம்பாய் எனப் பெண்ணை முன்னிலைப்படுத்திப் பாடல் இயற்றியுள்ளார். தனது பாடல் முழுவதுமே "மகடூஉ முன்னிலை" எனும் தொல்காப்பிய நெறியைப் பறைசாற்றுகிறார்.

மகளிரை முன்னிறுத்திப் பாடல் இயற்றுவது தமிழ் இலக்கியத்திற்குப் புதிதல்ல; இலக்கண நூலான காரிகையும், இறைநூலான திரு வெம்பாவையும் மகளிரை முன்னிலைப்படுத்தியே பாடப்பட்டுள்ளன. இதே நெறியைத் தமது பாடல் முழுவதிலுமே கையாண்டுள்ளார் குதம்பைச் சித்தர். இத்துணை சிறப்பு வாய்ந்த குதம்பைச் சித்தரின் பாடல்களில் மற்ற சித்தர்களைவிடக் குறளின் ஆதிக்கம் சற்று அதிகமாகவே ஆளப்பட்டிருக்கின்றது. இவரின் பாடல்களில் திருக்குறளின் தாக்கம் எந்த அளவிற்கு ஊடுருவி உள்ளது என்பதை அறிய முயல்வது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

எச்செயலைச் செய்தாலும் கடவுளை வணங்கிச் செய்வதே தமிழர் தம் மரபு. இதற்குச் சித்தர்களும் விதிவிலக்கல்ல. ஆனால் இறைவனை

வணங்குவது எதற்காக என்று தொடக்கத்தில் சுட்ட விரும்பிய குதம்பைச்சித்தர்,

பூரணம் கண்டோரிப் பூமியிலே வரக்
காரணம் இல்லையடி—குதம்பாய்
காரணம் இல்லையடி
போங்காலம் நீங்க நற்பூரணங் கண்டோர்க்குச்
சாங்காலம் இல்லையடி—குதம்பாய்
சாங்காலம்இல்லையடி

என இறைவன் பாதம் அடைந்தவர்கள் பிறவியாகிய இப்பெருங்கடலை நீந்துவார்கள் எனக் கரை சேர்ந்த குதம்பைச் சித்தர் விளக்க, வள்ளுவரும் தமது குறளில்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதவர்

என இறைப்பயனை வலியுறுத்துகின்றார். கருத்துருவாக்கம் மட்டுமின்றிச் சில இடங்களில் சொல்லாக்கத்திலும் வள்ளுவரை ஒத்துள்ளார் குதம்பைச் சித்தர்.

பற்றற நின்றானைப் பற்றறப் பற்றிடக்
கற்றார்க்கு முத்தியடி—குதம்பாய்
கற்றார்க்கு முத்தியடி

என்று வீடுபேறு அடையும் வழியைத் தெளிவாக்கிய சித்தர் வள்ளுவரின் அடியைப் பின்பற்றியிருப்பது பெரும்வியப்பே.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

மேலும் நற்பேறு அடையும் நல்லதொரு மார்க்கத்தையும் தமது பாடல் மூலம் எடுத்தியம்புகின்றார் குதம்பைச்சித்தர்.

ஆமைபோலைந்து மடக்கித் திரிகின்ற
ஊமைக்கும் முத்தியடி—குதம்பாய்
ஊமைக்கும் முத்தியடி
மந்தி மனத்தை வசப்படுத் திட்டார்க்கு
வந்தெய்தும் முத்தியடி—குதம்பாய்
வந்தெய்தும் முத்தியடி

வள்ளுவரும் தமது குறளில் இதே கருத்தை வெளிப்படுத்தி அரண்செய்கின்றார்.



ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

அறியாமை என்னும் இருளில் ஆட்பட்டுத் தான் மட்டுமின்றித் தன்னைச் சார்ந்த உயிர்களையும் துன்பத்தில் ஆளவிடுவான் அறியாதவன் என்பதை நன்கு உணர்ந்த குதம்பைச்சித்தர்,

வேள்வியில் ஆட்டினை வேவச்செய்துண்போர்க்கு
மீள்வழி இல்லையடி—குதம்பாய்
மீள்வழி இல்லையடி

என்று பாடுகின்றார். மண்ணில் உயிர்க்கருணை பற்றி எடுத்தியம்பிய முதற்பெரும் நூலான திருக்குறளும்,

அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்

என மேற்கண்ட கருத்தை அன்றே தமதுகுறளின்வழி உயிர்க்கருணையைப் பறைசாற்றுகிறார் வள்ளுவர்.

பொய்த்தவம் பூண்டு மக்களை மெய்ஞானம் பெறச் செய்யாமல், பொய் ஞானம் பேசும் போலி வேடதாரிகளை அன்றே துகிலுரித்தார் வள்ளுவப்பெருந்தகை.

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று

போலியாய், தாடி வளர்ப்பதாலும் சடை வளர்ப்பதாலும் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பதை ஆணித்தரமாய் உறுதியிட வள்ளுவர்,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

எனப் போலிகளை வெளிச்சம் போட்டுக் காட்டிய வள்ளுவரை முன்னிறுத்திக் குதம்பைச் சித்தரும் தமது கவியடியால் சாட்டையடி தருகின்றார். செங்காவி பூண்டு தெருவில் அலைவோர்க்கு,

எங்காகும் நல்வழியே—குதம்பாய்
எங்காகும் நல்வழியே
வெண்ணீறு பூசியே வீதியில் வந்தோர்க்குப்
பெண்ணாசை ஏதுக்கடி— குதம்பாய்
பெண்ணாசை ஏதுக்கடி

உலகில் தோன்றும் அனைத்துத் துன்பங்களுக்கும் முழுமுதற் காரணமாய் அமைவது ஆசை. இதை அறுத்தவருக்கே அமைதியான நல்வாழ்வு என்பதை வலியுறுத்தக் குதம்பைச் சித்தர்,

**ஆசையறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டென்ற**
**ஓசையைக் கேட்டிலையோ—குதம்பாய்**
**ஓசையைக் கேட்டிலையோ**
**தேக்கிய ஆசையைச் சீயென்றொறுத்தோரே**
**பாக்கியவான்களடி—குதம்பாய்**
**பாக்கியவான்களடி**

எனப் பாடியுள்ளார். ஆசையை அறுக்குமுகமாக வள்ளுவரும்,

**அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டு மாற்றான்வரும்**

என்ற குறளின் வழியாக உலகின் துன்பத்தைக் களைய முயல்கின்றார்.

நிலையில்லா இவ்வுலகில் என்றும் நம்முடன் வரப்போவது நாம் செய்த நல்வினையே என்பதை விளக்க வள்ளுவர்,

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல்**

என வள்ளுவர் விளக்கக் குதம்பைச்சித்தரும் இதை மையப்படுத்தி,

**நல்வினை தீவினைநாடிப் புரிந்தோர்பால்**
**செல்வன நிச்சயமே—குதம்பாய்**
**செல்வன நிச்சயமே**

இவற்றை உணர்ந்து கொள்ளாது நிலையில்லாத செல்வத்தை நிலைத்தது என எண்ணி மயங்கும் மக்களைப் பார்த்துக் குதம்பைச்சித்தர்,

**தேடிய செம்பொன்னும் செத்த போதுன்னோடு**
**நாடி வருவதுண்டோ—குதம்பாய்**
**நாடி வருவதுண்டோ**

என்று கேட்கின்றார். செல்வ நிலையாமையை இஃதெனச் சுட்ட அதற்கு முன்பே வள்ளுவர் ;

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அது விளிந் தற்று**

எனப் பொருள் நிலையாமையை வள்ளுவர்வழி குதம்பைச்சித்தரும் பொருள் ததும்பும் தன் பாடல் மூலம் விளக்குகின்றார்.

உலக நியதிகளைத் தெரிந்து கொள்ள ஒவ்வொருவரும் தவம் செய்ய வேண்டும். அத்தவம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாகத் திருக்குறளில்,



**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு**

என வள்ளுவர் தவம் இதுதான் எனச் சுட்டிக்காட்டக் குதம்பைச்சித்தரும் அதன்வழி நின்று புலன்களை அடக்குவதில்தான் பெருவெற்றி ஒளிந்துள்ளது என்பதை விளக்க,

**ஐம்புலன் வென்றே அனைத்துந் துறந்தோர்கள்**
**சம்புவைக் காண்பாரடி—குதம்பாய்**
**சம்புவைக் காண்பாரடி**

எனப் புலனடக்கத்தை வெளியிட்டு, உண்மையான தவம் எதை நோக்கி நம்மை இட்டுச் செல்ல வேண்டுமென்றால் நல்ல மெய்யறிவை நமக்கு நல்க வேண்டும் எனத் தம் அவாவை வெளியிட்ட குதம்பைச்சித்தர்,

**பொய்ஞ்ஞானம் நீக்கியே பூரணம் சார்தற்கு**
**மெய்ஞ்ஞானம் வேண்டுமடி—குதம்பாய்**
**மெய்ஞ்ஞானம் வேண்டுமடி**

என மெய்யுணர்வை எடுத்துக்காட்டிய குதம்பைச் சித்தர் வள்ளுவத்திலிருந்தே இதனை எடுத்திருப்பது என்பதற்கு சான்றாக,

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**

என்ற குறளைக் கூறலாம். செம்பொருளைக் காணும் அறிவே உண்மையான மெய்யுணர்வின் வித்து என்பதற்கு இப்பாடலடி தக்கதொரு சான்று.ஒருவனிடத்து இருக்கக்கூடாத தீய பழக்கங்களைச் சுட்டத் துணிந்த வள்ளுவர் அதைப் பல அதிகாரங்களில் தெள்ளிதின் வெளிப்படுத்துகிறார்.

உருவ வழிபாடு, பூசை, மந்திரம், சாதி, சமயம் போன்ற சமூக வழக்கங்களைக் கண்டிப்பதே சித்தர்கள் பாடல்களின் மூலமாகும். அதை அனைத்துச் சித்தர்களும் மிகச் சிறப்பாக எடுத்தாண்டிருப்பினும் ,தமிழர் தம் வாழ்வியல் நூலான திருக்குறளில் இக்கருத்து அன்றே வெளிப்படுவது பெரும் வியப்பே. இதன்வழி குதம்பைச் சித்தரும் தமது பாடல்களில் பெரும் பகுதியை வள்ளுவரிடத்திருந்து பெற்று, தமது பகுத்தறிவுக் கருத்துக்களால் நல்லதொரு சமூகம் மலரத் தமது பாடல்களை வித்துக்களாய் இச்சமூகத்தில் தூவியிருக்கின்றார். இவர் பாடல்களின் சொற்சுவையும், பொருட்சுவையும் படித்து இன்புறத்தக்கது.